# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

திங்கட்கிழை 13.09.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

## இலங்கை தொடர்பாக ஆணையாளர் உரை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இன்று திங்கடகிழமை ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என கருதுகின்ற விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலெட் மனித உரிமை பேரவைக்கு இன்று அறிவிப்பையொன்றை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும்

02 ஆம் பக்கத்தில்...

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு தீர்வு வழங்க ஆராய்வு

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு தீர்வொன்றை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் சில சரத்துகளை சீரமைப்பதற்காக தேசிய பாதுகாப்பு சபையினால் நியமிக்கப்பட்ட குழுவே இது குறித்து ஆராய்ந்து வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு

02 ஆம் பக்கத்தில்...

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் சர்வதேசத்துக்கு பிரச்சினையை எடுத்து செல்வோம்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு எச்சரிக்கை

(ஜுட்)

தமிழ் அரசியல் கைதிகளை ராஜபக்ஷ அரசாங்கம் விடுவிக்கத் தவறும் பட்சத்தில் நாங்கள் சர்வதேசத்திற்கு இந்தப் பிரச்சனையினை எடுத்துச் செல்வோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில்

02 ஆம் பக்கத்தில்...

# பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்தவர்களுக்கு மன்னிப்பு வழங்குங்கள்



(அ. அச்சுதன்)

திருகோணமலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சிலர் ஊடக சந்திப்பினை ஏற்பாடு செய்து கைது செய்யப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஊடக சந்திப்பு திருகோணமலை நகரில் இடம்பெற்றது.

02 ஆம் பக்கத்தில்...

# கடந்த கால குறைகளைப் பற்றி விவாதிக்காமல் நிகழ்காலத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும்

## இத்தாலியின் போலோக்னா நகரில் நடைபெறும் ஜி20 சர்வமத மாநாட்டில் பிரதமர் மகிந்த



கடந்த காலத்தின் குறைகளைப் பற்றி விவாதிப்பதற்குப் பதிலாக, நாம் நிகழ்காலத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும். நாம் சகோதரத்துவம் மற்றும் புரிதலின் ஊடாக உறவுகளை வளர்த்துக் கொண்டால் நாம் அனைவரும் எதிர்பார்க்கும் அற்புதமான புதிய

02 ஆம் பக்கத்தில்...

# இலங்கை தமிழர்களுக்கு உரிமைகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை

## திருச்சியில் இராதாகிருஷ்ணன் எம்.பி பேட்டி



(க.கிஷாந்தன்)

இலங்கை தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படவில்லை. மக்களுக்கான உரிமைகள் இன்னும் கிடைக்கவில்லை என மலையக மக்கள் முன்னணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வே.ராதாகிருஷ்ணன்

02 ஆம் பக்கத்தில்...

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: காத்தான்குடியைச் சேர்ந்த 52 பேரிடம் குற்ற தடுப்பு பிரிவு வாக்கு மூலம் பதிவு

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு- காத்தான்குடியில் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த சஹ்ரான் ஹாஷிமுடன் தொடர்பினை பேணி வந்ததாக அடையாளம் காணப்பட்ட 52 பேருக்கு எதிரான வாக்கு மூலங்களை, பயங்கரவாத குற்ற தடுப்பு பிரிவினர் வீடு வீடாக சென்று பதிவு செய்து வருவதாக பொலிஸ் உயர்

02 ஆம் பக்கத்தில்...

# திருமலை - கோழும்பு பிரதான வீதியில் அறுவடை செய்த வயல் நிலங்களுக்கு தீ வைப்பு



(எப்.முபாரக்)

திருகோணமலை கொழும்பு பிரதான வீதியின் கந்தளாய் பகுதியில் அறுவடை செய்த வயல் நிலங்களுக்கு இனந்தெரியாதோரால் தீ மூட்டியதையடுத்து புகை மண்டலமாக காணப்படுகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

# அமங்கல நிலையாக மாறியுள்ள கோட்டாபயவின் பதவியேற்பு

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கவலை



கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற போது மங்கல நிகழ்வாக இருந்த போதும் தற்போது அமங்கல நிலை காணப்படுவதாக அபயராம விகாரையின்

02 ஆம் பக்கத்தில்...






# வரலாறு காணாத வங்குரோத்து நிலையை நாடு அடைந்துள்ளது

(ஊர்காவலன்)

கொரோனா பேரழிவால் வேறு எந்த நாடும் சரிந்துவிடாதளவு நம் நாடு வரலாறு காணாத வங்குரோத்து நிலையை அடைந்த வண்ணமுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித்

02 ஆம் பக்கத்தில்...

# மடு சுகாதார அதிகாரி பிரிவில் ஒரேநாளில் 84 கோவிட் தோற்றாளர்கள் உறுதி



(வாஸ் கூஞ்ஞ)

கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் 95 கொரோனா தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர். மடு சுகாதார அதிகாரி பிரிவிலேயே அதிகமானோர் இனம்

02 ஆம் பக்கத்தில்...











# சுவிஸ் தூதரக அலுவலகத்தை மீண்டும் திறக்கவும்: வடக்கு - கிழக்கு ஆயர்கள் கூட்டாக கோரிக்கை

(யாழ்.கீதன்)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்து பின்னர் தற்காலிகமாக மூடப்பட்ட சுவிஸ் தூதரக அலுவலகத்தை மீண்டும் திறக்க ஆவன செய்யுமாறு இலங்கைக்கான சுவிஸ் தூதரிடம் வடக்கு - கிழக்கு ஆயர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

# காந்தி இல்லம் நியுசிலாந்து நிதியத்தின் அனுசரணையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் காந்தி இல்லம் நியுசிலாந்து நிதியத்தினால் கொவிட் பரவல் காரணமாக வறுமானத்தினை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அடங்கிய தொகுதிகள் இரண்டாம் கட்டமாக நேற்று மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம்.பாரிசினால் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிராமங்களான கன்னியா கிளிக்குஞ்சுமலை மற்றும் சீனக்குடா பிரதேசத்தில் உள்ள நெடுங்குடா கிராமங்களில் உள்ள 165 வறிய குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர்உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

கொவிட் அசாரண சூழல் காரணமாக பயணக்கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுவரும் நிலையில் நாளாந்த கூலித் தொழில் செய்யும் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கே வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் அவசரகால நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் இந்த நிவாரண பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



# திருமலை - கொழும்பு பிரதான வீதியில்

இச்சம்பவம் நேற்று (12) மாலை இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் பேராற்றுவெளி பகுதியிலுள்ள வயல் நிலங்களில் அறுவடைகாள் மேற்கொண்டு விட்டு இவ்வாறு வயலுக்கு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதியில் பாரியபுகை மண்டலமாக காணப்படுவதோடு திருகோணமலை கொழும்பு பிரதான வீதியில் பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்தோடு அப்பகுதியில் வீடுகளிலுள்ள சிறுவர்கள் மற்றும் கைக்குழந்தைகளை வைத்திருப்போரும் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். பாரிய புகையாக காணப்படுவதால் பேராற்றுவெளி பகுதியிலுள்ளோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

பிரதான வீதியில் வாகனத்தில் செல்லுவோர் ஒளிச் சமிக்கைகளை இட்டு செல்கின்றனர்.

எனவே அந்த தீயினை அனைத்து விடுமாறும் அப்பகுதியில் வசிப்போர் தெரிவிக்கின்றனர்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: காத்தான்குடியைச்

அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரானின் பயிற்சி முகாம் மற்றும் அதனுடன் இணைந்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய காத்தான்குடியைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் என நூற்றுக்கு மேற்பட்டோரை கடந்த காலத்தில் பாதுகாப்பு படையினர் கைது செய்து, நீதிமன்றத்தின் அனுமதியுடன், தடுப்பு காவலில் வைத்து தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதில் 5 பேரை நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆனாலும், தொடர்ந்து பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மேற்கொண்டு வரும் விசாரணையின்போது, ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த சஹ்ரானின் முகநூல் மற்றும் தொலைபேசி ஆகியவற்றின் ஊடாக தொடர்புகளை பேணிவந்த காத்தான்குடியைச் சேர்ந்த 52 பேரை அடையாளம் கண்டுகொண்டனர்.

இந்நிலையில் அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கையை, சனிக்கிழமை முதல் பயங்கரவாத குற்ற தடுப்பு பிரிவினர் ஆரம்பித்து, வீடுவீடாக சென்று அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்து வருகின்றனர் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது

அதில் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மேலும் தெரிவித்ததாவது, எமது பிள்ளைகளுக்கும் பயங்கரவாத அமைப்பாக அரசாங்கம் கூறும் தரப்பினருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது அவர்களுடைய வயதுக்கு இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றதே அவர்களுக்கு தெரியாது இருப்பினும் சமூக வலைத்தளங்களில் அதன் பின்விளைவுகள் பற்றி அறியாமல் தவறுதலாக சில பதிவுகளை பதிவிட்டிருந்தார்கள் அது தவறுதான் அந்த தவறை மன்னித்து விடுதலை செய்ய அதிமேதகு கௌரவ ஜனாதிபதி அவர்கள் ஆவண செய்ய வேண்டும் எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை அவர்கள் செய்யமாட்டார்கள் எனவும் மன்றாட்டமாக கேட்டுக் கொண்டார்கள்.

இவர்கள் தொடர்பாக வழக்குகள் இடம்பெற்று வரும் நிலையில் அதில் எவ்வித முன்னேற்றமும் இல்லை அவர்களுடைய உழைப்பில்தான் எங்களுடைய வாழ்வாதாரம் சென்றது இப்போது நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றோம் எனவே எங்களுடைய குடும்ப நிலையை கருத்தில் கொண்டு அவர்களை பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தனர்

சமூக வலைத்தளங்களில் பயங்கரவாதத்துடன் தெடர்புடைய புகைப்படங்களையும், செய்திகளையும் பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் திருகோணமலையில் சில இளைஞர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த வருடமும் இவ்வருட ஆரம்பத்திலும் கைது செய்யப்பட்டிருந்தார்கள் இவர்களுடைய வழக்குகள் மூதூர் மற்றும் திருகோணமலை நீதி மன்றங்களிலும் இடம்பெற்றுவருகின்றது. அத்துடன் மனித உரிமைகள் பேவையின் 48வது மகாநாடு இம்மாதம் 13ம் திகதி இடம்பெறவுள்ளதுடன் இதில் முதல் விடயமாக இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விடயம் பேசப்படவுள்மையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது

நீண்ட காலமாக வழக்கு தாக்கல் செய்யாது தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய சிபாரிசுகளை முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாக அந்த குழு அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த குழுவின் தலைவர், முன்னாள் பிரதம நீதியரசர் அசோக்க டி சில்வா கருத்து வெளியிடுகையில்,

நாட்டிலுள்ள சிறைகளில் சுமார் 400 பேர் வரையில் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பான குற்றச்சாட்டு ஆவணங்களை நாளைய தினம் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, உள்ளநாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்ற தாக்குதல்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த சந்தேகநபர்களை நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை செய்ய ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறியமுடிகின்றது என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சுவிஸ் தூதரக அலுவலகத்தை மீண்டும் திறக்கவும்; வடக்கு - கிழக்கு

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் மறைமாவட்டங்களின் ஆயர்கள் கையொப்பமிட்டு இலங்கைக்கான சுவிஸ் தூதருக்கு அனுப்பிய கடிதத்தில் குறித்த வேண்டுகொள் விடுக்கப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் நிறைவுற்றபோதும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ள வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் சர்வதேச நிறுவனங்கள், மனித உரிமை கண்காணிப்பாளர்கள், இராஜதந்திர அதிகாரிகளின் பிரசன்னம் மிகவும் அவசியமாக இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் சுவிஸ் தூதரகத்தினுடைய அலுவலகத்தின் பிரசன்னம் மிகவும் முக்கியமானது என்பதை ஆயர் மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளையில், கடந்த காலங்களில் சுவிஸ் அலுவலத்தின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளினால் இலங்கை நாடும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்களும் அடைந்த நன்மைகளுக்காக இந்தக் கடிதத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையை தமது பூர்வீகமாகக் கொண்டு தற்போது சுவிஸ் பிரஜைகளாக இருக்கின்றவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பலர் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழ்கிற நிலையில் அவர்களது சமூக, கலாச்சார, பொருளாதார தேவைகளைக் கண்காணிக்க யாழ்ப்பாணத்தில் மீளத் திறக்கப்படும் சுவிஸ் தூதரக அலுவலகம் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்றும் குறிபிட்டுள்ள வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம், இவற்றைக் கருத்தில் கொண்டு இந்த அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் விரைவில் மீளத் திறக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மடு சுகாதார அதிகாரி பிரிவில் ஒரேநாளில் 84 கொவிட்

காணப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மன்னார் மாவட்டத்தின் கொரோனா தொடர்பாக நாளாந்தம் வெளியிடும் தனது அறிக்கையில் 11.09.2021 அன்று சனிக்கிழமை அன்றைய நிலவரம் தொடர்பாக தெரிவித்திருப்பதாவது

11.09.2021 அன்று சனிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் 95 கொரோனா தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளனர்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனையில் 93 பேரும், அன்ரிஜன் பரிசோதனையில் 02 பேருமே இவ் கொவிட் தொற்றாளர்களாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மடு பொது சுகாதார அதிகாரி பிரிவில் 84 தொற்றாளர்களும், கடற்படையினரில் 09 நபர்களும், பெரிய பண்டிவிருச்சான் மற்றும் தலைமன்னார் ஆகிய மாவட்ட வைத்திசாலைகளில் தலா ஒருவருமாக மொத்தம் 95 நபர்களே கொவிட் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 28616 பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 1960 கொவிட் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். இவ் நடப்பு மாதமாகிய செப்ரம்பர் மாதம் 856 பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 276 பேர் கொரோனா தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்

மன்னார் மாவட்டத்தில் இற்றைவரை 22 இறப்புக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# வரலாறு காணாத வங்குரோத்து நிலையை நாடு அடைந்துள்ளது

தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தன்னிச்சையான, தூரநோக்கற்ற, பொறுப்பற்ற நிர்வாகத்தால் கடுமையான விளைவுகளை நாடு எதிர்கொள்ள வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தினை அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அந்த அறிக்கையில்,

அரசாங்கம் தனது அரசியல் மற்றும் சுயநல நிகழ்ச்சி நிரல்களுடன் நாட்டு மக்களின் வாழ்க்கையை நசுக்குகின்றது. மேலும் இந்தத் துயரத்தை நாட்டின் எதிர்கால சந்ததியினரும் அனுபவிக்க நேரிடும் என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும்.

முறைசாரா மூடிய பொருளாதார முறையை நோக்கி நகர்ந்த மூலம் சமீப காலத்தில் உலகில் வேறு எந்த நாடும் எடுக்காத முட்டாள்தனமான முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது. அதன் தீவிர விளைவுகளை மிக விரைவில் உணரப்படும்.

அரசாங்க அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் நாட்டிற்கு நகைச்சுவைச் செய்திகளையே சொல்கின்றனர். நாட்டில் எழுந்துள்ள எந்த ஒரு பிரச்சனைக்கும் அவர்களிடம் பதில் இல்லை.

மக்கள் மூன்று வேளை அல்ல ஒரு வேளை போசாக்கு உணவை எடுக்க முடியாது மிகவும் ஆதரவற்ற நிலையில் இருக்கும் நேரத்தில், சில அரசாங்க சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவை இரண்டோ வேளைக்கு அல்லது ஒரு வேளைக்கு மட்டுப்படுத்துமாறு கூறி அறிக்கைகளை வெளியிடும் அளவிற்கு அரசாங்கத்தின் சுபிட்ச அலை பாய்கின்றது.

இந்தப் பேரழிவு தருணத்தில் கூட, பல அத்தியாவசிய பொருட்களின் கடுமையான பற்றாக்குறை நிலவுவதோடு, மறுபுறம், பொருட்களின் விலைகள் அசாதாரணமாக உயர்ந்துள்ளன.

தாங்கமுடியாத வகையில் பொருட்களின் விலை உயரும் நிலையில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட நாடு மற்றும் உணவுக்காக வரிசைகளில் காத்திருக்கும் சகாப்தம் உருவாகிவருகின்றன.

ஒரு பிரச்சனைகள் எழும்போதெல்லாம், எழுந்துள்ள பிரச்சனைக்கு ஒரு நீடித்த தீர்வை வழங்காது அரசாங்கம் மண்டை ஓடுகளையும் பிரமுகர்களையும் மாற்றுவதைத் தவிர வேறு எதையும் செய்யாதுள்ளது.

இந்த நாட்டின் பொருளாதாரக் கொள்கை முற்றிலும் மாற வேண்டும் என்றாலும்,தற்போதைய அரசாங்கம் ஒரு போலித்தனத்தைச் செயல்படுத்துவதன் மூலம் அரசாங்கம் ஒரு இசை நாற்காலி போட்டியைத் தொடங்கியுள்ளது. அரசாங்கம் ஒரு மூடிய பொருளாதாரத்தை நோக்கி நகர்கிறது என்றும் என்றாலும் அரசாங்கம் பரந்த பொருளாதார மாற்றங்களை சிறந்த முகாமைத்துவத்துடன் மேற்கொள்ள வேண்டும்.

இதனூடாக இந்த நாட்டு மக்களுக்கு நிதி தூண்டுதலை கட்டாயம் வழங்க வேண்டியதோடு, சுபிட்சத்துக்காக மக்கள் எதிர்கொள்ளும் துரதிர்ஷ்டவசமான விதியிலிருந்து அவர்களை மீட்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால், அரசாங்கத்தின் தலைவிதியை மக்கள் நிதீமன்றத்தின் முன் முடிவு செய்வதை தடுக்க முடியாது போகும் என்றும் நாங்கள் வலியுறுத்துகிறோம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமங்கல நிலையாக மாறியுள்ள கோட்டாபயவின் பதவியேற்பு

விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாம் அண்ணார்ந்து பார்த்துக் கொண்டு எச்சில் துப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

சௌபாக்கிய நோக்கு என்ற அடிப்படையில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் செயல்பட்டாலும் வாக்களித்த மக்கள் திருப்தி அடையவில்லை.

சிலர் வந்து எங்களிடம் கேட்கின்றனர், தேரர் அவர்களே! இது கடவுள் சாபமா அல்லது கடவுள் கோபமா என்று. அன்று கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற போது மங்கல நிகழ்வாக இருந்தபோதும் தற்போது அமங்கல நிலை காணப்படுகிறது.

ஒருசிலர் பதவி விலகுகின்றனர், சிலர் ஓரமாக நின்று வேடிக்கை பார்க்கின்றனர், மத்திய வங்கி ஆளுநர் அழுத்தம் காரணமாக பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

இவ்வாறான நிலை ஏற்படும் என நாம் ஒருபோதும் நினைக்கவில்லை. நாட்டை சீன கொலனியாக மாற்ற வேண்டாம் என கூறினோம். ஆனால் அனைத்தையும் சீனாவிற்கு விற்றுள்ளனர்.

தற்போது மேலும் 13 ஏக்கர் காணியை விற்க முயற்சித்து வருகின்றனர். அனலில் இருந்து நெருப்பில் விழும் நிலைக்கு மாறி உள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யாவிட்டால்

அவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் இதனைத் தெரிவித்திருந்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

நாட்டிலுள்ள 26 சிறைச்சாலைகளில் சுமார் 20,228 கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். உண்மையில் நாட்டினுடைய சிறைக்கட்டமைப்பின் பிரகாரம் சுமார் 12 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்துப் பராமரிக்க முடியும் என சிறைத்துறை தலைமையகம் தெரிவிக்கின்றது.

நாட்டுக்குள் அன்றாடம் அதிகரித்துச்செல்கின்ற குற்றச்செயல்கள் காரணமாகவே சிறைக்கூடங்கள் நிரம்புவதாக கூறிவிட்டு வெறுமனே ஒதுங்கிவிட முடியாது.

வளப்பற்றாக்குறைகளை கோடிட்டுக் காட்டிக்கொண்டிருக்கும் சட்டம், மற்றும் நீதித்துறையின் தாமதம் கைதிகளுக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதிலிருந்து தூரமாகவே நிற்கிறது.

சட்டத்துறை காரியாலயத்திலும் நீதிமன்றங்களிலும் வழக்குக்கோவைகள் குவிந்து கிடக்கின்றன. வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுமென நீதி அமைச்சு தெரிவித்துவருகின்ற போதிலும் பெரும்பாலான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீண்டகால தவணைத்திகதியிடப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகிறது.

விசேடமாக , இரண்டு தசாப்த காலங்களுக்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

தொடர் மன அழுத்தமானது வன்முறை, போதைக்கு அடிமைப்படுதல், தற்கொலை எண்ணம் போன்ற விபரீத நிலைக்கு கைதிகளை இட்டுச்செல்லும் அபாயம் ஏற்படலாம்.

'கைதிகளும் மனிதர்களே' என்பதற்கிசைய அவர்களது வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் தலையாய கடமையாகிறது என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இன்று

பாரதூரமான மனித உரிமை மீறல்கள் சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பில் பல கடுமையான கட்டுப்பாடுகள் அடங்கிய தீர்மானத்தை பெப்ரவரியில் மனித உரிமை பேரவை நிறைவேற்றியது.

இந்த தீர்மானங்களில் எவை நடைமுறைப்படுத்தப்பட்டன எவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என தெரிவிப்பதே மனித உரிமை ஆணையாளரின் இந்த உரையின் நோக்கம் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்றுள்ள முன்னேற்றங்களை பார்வையிடுவதற்காக மார்ச் மாதத்திற்கு முன்னர் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டும் என அடுத்தவாரம் அரசாங்கம் அழைப்பை விடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் மனித உரிமை ஆணையாளர் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என தெரிவித்துள்ள இராஜதந்திர வட்டாரங்கள்,ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை தான் அடையாளம் கண்டுள்ள விடயங்களை அரசாங்கம் முதலில் நடைமுறைப்படுத்தவேண்டும் என எதிர்பார்க்கின்றது என குறிப்பிட்டுள்ளன.

அரசாங்கத்தின் அறிக்கை வெளியாகியுள்ள போதிலும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை கடுமையானதாக காணப்படும் என ஜெனீவாவில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவருடைய உரை அல்லது அறிக்கை கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பெரிதும் பிரதிபலிப்பதாக காணப்படும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# விவசாயிகள் நஷ்ட பாதிப்படைந்து தற்கொலை செய்தால் மட்டக்களப்பு அரசியலாளர்கள் பொறுப்புக் கூறியாக வேண்டும்

**துறையூர் சஞ்சயன்**

மட்டக்களப்பில் இரு போகமும் செய்கை மேற்கொள்ளப்படும் 21%,000க்கும் மேற்பட்ட தாழ்நில மேட்டு நிலக்காணிகளில் ஏற்கனவே பழக்கப்பட்ட 95 வீத இரசாயன உரத்தை வழங்குவதன் மூலமே நெல்லுற்பத்திகளை பெருக்கவும் வறுமையின்றி வாழவும் முடியும். அதை விடுத்து அரச தரப்பிலிருந்துகொண்டு நூற்றுக்கு நூறு வீதம் இயற்கையுரத்தை பயன்படுத்த வேண்டுமென கட்டாயப்படுத்துவது விவசாயிகளை நடுத்தெருவில் கைவிடுவதற்கு ஒப்பாகும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்மநாபா மன்றத் தலைவரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறுகையில்,

ஒரு போக ஒரு ஏக்கர் காணிக் குத்தகையினை ரூபா 40,000க்குப் பெற்று, அறுகு கொத்துவதிலிருந்து விதைப்பு, பசளைகள் கிருமிநாசினிகள் வீசிறல், தினக்கூலி கொடுப்பனவு உட்பட அறுவடை வரையான செலவுகளிலிருந்து, செய்கையிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானம் மிக மிக குறைவாகவுள்ளது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் நஞ்சருந்தி தற்கொலை செய்த நிலையும் கடந்த காலங்களில் நிகழ்ந்தது.

வயற்காணிகளில் ஏற்கனவே



யூரியா, பொட்டாசியம், நிலப் பசளை இட்டு பதப்படுத்தப் பட்ட விவசாய நிலத்தில் சடுதியாக இயற்கை உரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பது சாத்தியப்படுமா என்பதை முதலில் சிந்திக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை ஈடு செய்வதில் மட்டக்களப்பு மாவட்டமும் நெல்லுற்பத்தியில் பாரிய பங்களிப்புச் செய்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலேயே மட்டக்களப்பில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

அரசாங்கத்தினால் தரப்பட்ட இரசாயன உரங்கள் பழக்கப்பட்ட இடத்தில் நூற்றுக்கு நூறு வீதம் இயற்கை உரங்களை பயன்படுத்துங்கள் என்று கூறுவது தவறானது. ஆகவே இயற்கை உரம் தொடர்பான விடயங்களை ஏற்றுக்கொள்கிறோம். மட்டக்களப்பு மக்கள் அதை வெறுக்கவில்லை. இயற்கை உரம் அமுலாக்குவதற்குரிய ஒத்துழைப்புகளை வழங்குவோம். ஆனால் உடனடியாக பழக்கப்படுத்தாது எதிர்வரும் காலங்களிலேயே இயற்கை உரங்களை பயன்படுத்துவோம்.

உரத்துக்கு ஏற்றாற் போலவே விளைச்சல்களும் இருந்தன. அதற்கேற்றாற் போலவே விலையும் நிர்ணயிக்கப்பட்டது. ஏனைய இயற்கை உரங்களை பயன்படுத்தும்போது விளைச்சல் குன்றியே காணப்படும். அவ்வாறு இருந்தால் செலவு கூடுதலாகவும் வருவாய் குறைவாகவும் கிடைக்கும். ஆகவே வறுமையில் விவசாயிகளை வாட வைப்பதற்குரிய ஏற்பாடாகவே பார்க்கிறேன்.

இயற்கையுரத்தை பயன்படுத்தி விவசாயிகள் நஷ்ட பாதிப்படைந்து தற்கொலை செய்தால் அரச தரப்பிலுள்ள மட்டக்களப்பு அரசியலாளர்கள் இருவரும் பொறுப்புக்கூறி ஆக வேண்டும் என்றார்.

## இஞ்ச பாருங்கோ

**நாம்** கேள்விப்படும் பலர் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் கைமருந்துகளை எடுத்துக் கொண்டு சாதாரணமாக நடமாடித்திரிகின்றனர்.

இன்னும் பலர் பரிசோதித்து தொற்று இனங்காணப்பட்டால் தனிமைப்படுத்தி விடுவார்கள் என்ற பயத்தில் தனியார் வைத்தியர்களிடம் போய் மருந்து வாங்கி உட்கொண்டு விட்டு சுகமாக நடமாடுகிறார்கள். இவர்களுக்கு தொற்று இருக்குமானால் பிறருக்குப் பரவும் வாய்ப்புகள் மிக அதிகம். சிகிச்சை அளிக்கும் தனியார் வைத்தியர்களும் இவர்களைச் சரியாக அறிவுறுத்துவதாகத் தெரியவில்லை. மேலும் அறிகுறிகளோடு ஒருவர் அன்ரிஜன் பரிசோதனை செய்யலாம் என்று எம்.ஓ.எச். அலுவலகம் போனால் அங்கே பரிசோதிக்காமல் திருப்பி அனுப்பி விடுகிறார்கள்.

தங்களிடம் பதிவு செய்யப்பட்ட எந்த நோயாளியுடன் நேரடித் தொடர்பில் இருந்தீர்கள் என்று நிரூபித்துக் காட்டினால்தான் பரிசோதனை. இந்த நிலையில் ஊரடங்கையும் மீறித் தொற்றுக்குள்ளானவர்கள் சமூகத்தில் சாதாரணமாக நடமாடித்திரிகின்றனர்.

நிலைமை இப்படி இருக்கும் போது எப்படி தொற்று பரவலைக் கட்டுப்படுத்த முடியும்? பொது மக்களை மாத்திரம் குற்றம் சொல்ல முடியாது. பரிசோதனை செய்ய மறுக்கும் சுகாதாரப் பிரிவினர், சமூகப்பொறுப்பை உணராமல் சிகிச்சை வழங்கும் தனியார் வைத்தியர்கள் போன்றவர்களும் பொறுப்பாளர் அல்லவா?

# களுவன்கேணியில் வடிசாராயம் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது



மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மாவட்டத்தில் சட்டவிரோத போதைப் பொருட்களை ஒழிக்கும் செயற்பாடுகள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொலிசாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்று ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணிக் கிராமத்தில் பெருமளவிலான வடிசாராயங்களும், அதற்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருட்களும் ஏறாவூர் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் குறிப்பிட்ட பொருட்களுடன் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# ஆரையம்பதியில் தடுப்பூசி !





**ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் கொவிட் தடுப்பூசி வழங்கல் செயல் திட்டம் வைத்தியசாலைபொறுப்பதிகாரியும், மாவட்டவைத்தியஅதிகாரியுமான வைத்தியகலாநிதி டாக்டர் திருநாவுக்கரசு கௌரிசங்கரன் தலைமையில் நடைபெற்ற போது...**

**படங்கள்**
**வி.ரி.சகாதேவராஜா**

# பொத்துவில் கோட்டுக்கல் பிரதேசத்திற்கு எஸ்.எம்.எம். முஷாரப் கள விஜயம்





**(ஏ.பி.எம்.அஸ்ஹர்)**

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொத்துவில் கொட்டுக்கல் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்.

இதன் போது அங்குள்ள மீனவர்களை நேரில் சந்தித்ததுடன் தொழில் ரீதியாக அவர்கள் எதிர் நோக்கும் சமகாலப் பிரச்சனைகள் தொடர்பாக கேட்டறிந்தார்.

அத்துடன் அவர்களின் அத்தியாவசிய கோரிக்கைகள் என்பனவற்றை கேட்டறிந்து அதற்கான தீர்வுகளை உடனடியாக மேற்கொள்வதாகவும் இங்கு உறுதியளித்தார் இம்மீனவர்களு டனான சந்திப்பின் பின்னர் பொத்துவில் ஹிதாயாபுரத்தில் அமைந்துள்ள தவிசாளர் பூங்காவுக்கு விஜயம் செய்தது அங்கு நடைபெறவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் பற்றி பிரதேச மக்களுடன் கலந்துரையாடினார்.




# செங்கல் லோறி விபத்து: மதிலில் மோதி தடம்புரண்டது!

**(வி.ரி.சகாதேவராஜா)**



நயினாகாட்டிலிருந்து செங்கல் ஏற்றிவந்த ரிப்பர் லொறியொன்று விபத்துக்குள்ளானதில் பாரியசேதம் ஏற்பட்டது.

இச்சம்பவம் காரைதீவு பிரதானவீதியில் சனிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் இடம்பெற்றது.

நயினாகாட்டிலிருந்து கல்முனை நோக்கி செங்கல் ஏற்றிக்கொண்டு வந்தகொண்டிருக்கையில் காரைதீவு கந்தசுவாமி ஆலயமுன்னாலுள்ள பிரதானவீதியில்வைத்து திடிரென டயர் வெடித்து இவ்விபத்து சம்பவித்துள்ளது.

திடிரென டயர்வெடித்தகாரணத்தினால் வேகமாகவந்த லாறி ஆலயத்திற்கு முன்னாலுள்ள வீட்டு மதிலில் மோதி தடம்புரண்டது.. மதில் சுக்கு நூறாக உடைந்தது. ஏற்ணீ வந்த செங்கல் அனைத்தும் வீதியில் சிதறியது.

எனினும் யாருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை. காரைதீவுப்பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வீரமா நகரில் தோடர் இடருதவி பணி







**(அ.அச்சுதன்)**

மூதூர் கிழக்கு , பாட்டாளிபுரம் கிராமசேவையாளர் பிரிவு இயல்பாக வறுமையினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போதைய முடக்க நிலை மற்றும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை போன்றவற்றினால் மக்கள் பாரியளவில் உணவுத்தட்டுப்பாட்டை எதிர் நோக்கியுள்ளதுடன் அன்றாட கூலி வேலைகளையும் இழந்து தவிக்கின்றனர்.

இந்நிலைமையினைக் கருத்தில் கொண்டு உள்ளூர் அமைப்புக்களினால் விடுக்கப்பட்ட உதவிக் கோரிக்கைகளுக்கமையவும் தாமாக முன் வந்தும் சிலர் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில் வீரமாநகரில் கொரோனாத்தொற்றினால் சாவடைந்த பெண்ணின் குடும்பத்துக்கும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பத்துக்கும் பாலைத்தோப்பூரைச் சேர்ந்த மொகமட் மொகைதீன் அவர்களினால் டருதவிப் பொருட்கள் வழங்கப்பட்டது. அத்துடன் மூதூர் பிரதேச இந்துக்குருமார் சங்கத்தலைவர் சிவஸ்ரீ . பாஸ்கரன் குருக்கள் அவர்களினால் கொரோனாத் தொற்றினால் சாவடைந்த பெண்ணின் குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் பால்மா போன்றனவும் பணமும் வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை ஐக்கிய சுவிசேச திருச்சபையின் போதகர் திரு. ஜெயக்காந்தன் அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட 28 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த உதவிகளை மக்களின் நிலையறிந்து விரைந்து உதவிய மொகமட் மொகைதீன் , மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ .பாஸ்கரன் குருக்கள் மற்றும் போதகர் திரு.ஜெயக்காந்தன் ஆகிய அனைவருக்கும் பிரதேச மக்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான
காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch

Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்

ECDL
Office
Windows 10



தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

Aaran Ayurveda
& Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# பெருந்தோட்ட மக்களுக்கு வலிகளை கொடுத்துவிட்டு இன்பம் காண்கின்றது தற்போதைய அரசாங்கம்

## உதயகுமார் எம்.பி தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு வலிகளை கொடுத்துவிட்டு, அந்த வலியில் இன்பம் காண்கின்றது தற்போதைய அரசாங்கம். இவ்வாறான துரோக நடவடிக்கைகளுக்கு மலையகத்தில் உள்ள ஆளும் கட்சியும் துணை நிற்கின்றது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் தாக்கத்தை கருத்திற் கொண்டு டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு ஒரு தொகை சுவாச கருவிகள் மற்றும் முகக்கவசங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமாரின் செ ாந்த நிதியின் கீழ் இவ் பொருட்கள் வைத்தியசாலைக்கு 11.09.2021 அன்று வழங்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமாரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் மத்திய மாகாண உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளருமான சோ. ஸ்ரீதரன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட வைத்தியசாலையின் சார்பாக மாவட்ட உதவி வைத்திய அதிகாரி ஜே.அருள்குமரன் வைத்தியசாலையின் நிர்வாக உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டதன் பின் ஊடகவியாலளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மேலும் பல பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்நிலையில் மக்களை மேலும் சிக்கலுக்குள் தள்ளும் வகையில் வர்த்தமானி அறிவித்தல்களும் வெளிவருகின்றன. இந்த அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை. அதனால் தான் மாறி, மாறி வர்த்தமானி அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

மக்களுக்கு இன்று வருமானம் இல்லை. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. சீனி விலை அதிகரிப்பு, கோதுமைமாவின் விலை அதிகரிப்பு என மக்களை படுபாதாளத்துக்குள் தள்ளும் வகையிலேயே விலை அதிகரிப்புகள் இடம்பெறுகின்றன. மேலும் 623 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் மேலும் பாதிக்கக்கூடும். நுவரெலியாவில் மரக்கறி உற்பத்தி செய்யப்பகின்றது. ஆனால் இங்கு மரக்கறி வகைகளின் விலைகள் அதிகம்.

மலையக பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள காணிகள் தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்படும் என நாம் அன்று குறிப்பிட்டோம். இன்று விற்கப்படுகின்றது. பால் பண்ணை என கூறியே விற்கப்படுகின்றது. பால் பண்ணை அமைப்பதற்கு பல பகுதிகள் உள்ளன. அப்படி இருந்தும் மலையகம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன? எமது மக்களை காணி உரிமையற்றவர்களாக்குவதே இதன் நோக்கம். இந்த துரோகத்துக்கு மலையகத்தில் உள்ள ஆளும் கட்சியும் துணை நிற்கின்றது. தோட்ட உட்கட்டமைப்பு பிரதமர் வசம் இருக்கின்றது. அதன்மூலம் உரிமைகள் வென்றெடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் கூறினார். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

# திருகோணமலையில் ஒரு வாரத்திற்குள் 789 புதிய கொரோனா நோயாளிகளும் 34 கொவிட் மரணங்களும் பதிவு

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)



நடப்புமாதத்தில் கடந்த ஒரு வாரத்தில் கிழக்கு மாகாணத்தில் 3206 கோவிட் -19 கொரோனா நோயாளர்கள் இங்கணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

மேலும் கடந்த ஆகஸ்ட் மதம் இறுதி வாரங்களில் ஆராயிரத்த்திட்க்கும் அதிகமானவர்கள் இங்கணப்பட்டிருந்த நிலையில் இம்மாதம் சடுதியாக குறைந்து காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்

கொரோனா மூன்றாவது அலையில் கிழக்கு மாகாணத்தில் இதுவரை 43405கொரோனா நோயாளிகளும் 794 கோவிட் மரணங்களும் பதிவான நிலையில் கடந்த ஒரு வாரத்தில் கிழக்கில் 77 மரணங்களும் பதிவாகியுள்ளதாக தெரிவித்த கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எ.ஆர். எம்.தௌபீக் கடந்த ஒரு வாரத்தில் ஆக கூடுதலாக திருகோணமலையில் 789 கொரோனா நோயாளிகளும் 34 கொரோனா மரணங்களும் பதிவான நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1074 நோயாளிகளும் 29 மரணங்களும் அம்பாறை மாவட்டத்தில் 1125 நோயாளிகளும் 8 மரணங்களும் உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 218 கோவிட் நோயாளிகளும் 06 மரணகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த டாக்டர் எ.ஆர். எம்.தௌபீக்.

# சட்டத்தரணி பொன்.சிவபாலன் நினைவு தினம்



யாழ் மாநகர சபையின் மறைந்த முன்னாள் முதல்வர் சட்டத்தரணி பொன்.சிவபாலன் அவர்களது 23 ஆவது நினைவு தினம் யாழ். சித்தன்கேணியில் அவரது இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் பதினோராம் திகதி யாழ் மாநகரசபையில் மாநகர போக்குவரத்து சம்பந்தமான உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். அவருடன் கூடவே யாழ் நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ்ட காவற்துறை அத்தியட்சகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் காவற்துறை அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் காவற்துறை அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையககாவற்துறை இன்ஸ்பெக்டர் மோகனதாஸ், யாழ் நகர பிரிகேட் மேஜர்கப்டன் ராமநாயக்க, காவற்துறை கான்ஸ்டபிள் ஜெராட், யாழ் மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப் பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் கொல்லப்பட்டனர்.

பொன் சிவபாலன்ன் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினை பிரதிநிதித்துவப் படுத்தி யாழ் மாநகரசபையின் முதல்வராக பணியாற்றியதுடன் பிரபல சட்டத்தரணியுமாக விளங்கினார். அவரது உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர்தூவி இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் த. நடனேந்திரன் முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினர்களான தங்க. முகுந்தன், எஸ் .அரவிந்தன் உட்பட குடும்ப உறுப்பினர்களும் பங்கு கொண்டிருந்தனர்.

# கல்முனையில் தென்னங்கன்றுகள் வழங்கி வைப்பு

(எம். என். எம். அப்ராஸ்)



பத்து இலட்சம் வீட்டுத்தோட்ட மனைப்பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகிறது.இதனடிப்படயில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் கல்முனை பிரதேச செயலக பிரிவில் உள்ளகல்முனைக்குடி சமூர்த்தி வங்கி வலய பிரிவில் தெரிவு செய்யப் பட்ட சமூர்த்தி உதவி பெறும் மற்றும் சமுர்த்தி உதவி பெற தகுதியான குடும்பங் களுக்கு வீட்டுத்தோட்ட விதைப்பொதிகள் மற்றும் தென்னங் கன்றுகள் வழங்கும் ஆரம்ப நிகல்வு கல்முனைக்குடி சமூர்த்தி வங்கி வலய முகாமையாளர் மோசஸ் புவிராஜ் தலைமையில் கல்முனைக்குடி 4ஆம் பிரிவு கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அதிதிகளாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே . லியாக்கத் அலி ,கல்முனை பிரதேச செயலக சமூர்த்தி தலைமை பீட சிரேஷ்டமுகாமையாளர் ஏ. ஆர். எம். சாலிஹ் ,கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா, சமுர்த்தி மகாசங்க முகாமையாளர் எஸ்.எஸ்.பரீரா, வலய உதவி முகாமையாளர் எஸ். எல். அஸீஸ் சமூர்த்தி உத்தி யோகத்தர்களான எம்.ஐ.எம். சித்தீக், எஸ்.எச். சமீம் மற்றும் பிரிவு மட்ட தலைவர்கள் என கலந்து கொண்டனர்.

# புன்னக்குடா கடலில் மூழ்கி பாடசாலை மாணவன் பலி



(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் புன்னக்குடாகடலில் தனது நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவன் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளான். இந்த சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர் தைக்கா பள்ளி வாயல் வீதியைச் சேர்ந்த 15 வயதுடைய முகமட் றமீஸ் முகமட் சஜாத் என்ற சிறுவனே பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் றகுமானியா மகா வித்தியாலயத்தின் தரம் 9 வகுப்பைச்சேர்ந்த இம்மாணவன்தனது பாடசாலை நண்பர்கள் ஐந்து பேருடன் கடல்குளித்து விட்டு கரை வந்துள்ளார். பின்னர் இவர் மீண்டும் பத்து நிமிடங்கள் குளிக்கப் போவதாகக்கூறி கடலின் தூரப்பகுதிக்கச் சென்று தைரியமிருந்தால் யாராவது இவ்விடத்திற்கு வாருங்கள்.என்று ஏனையவர்களையும் அழைத்துள்ளார்.

அதிலிருந்து சற்று நேரத்தில் அவர் பாரிய அலையில் சிக்குண்டு காணாமல் போனார். பின்னர் மீனவர்களின் பிரயத்தனமான தேடுதலையடுத்து சடலம் மீட்கப்பட்டு ஏறாவூர் ஆதாரவைத்தியசாலையில் வைக்கப்பட்டது.

பின்னர் செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நடைபெற்ற பிரேத பரிசோதனையினையடுத்து ஜனாஸா நல்லடக்கத்திற்காக குடும்ப உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக திடீர் மரணவிசாரணையதிகாரி எம்எஸ்எம். நஸிர் தெரிவித்தார்.

மரணமடைந்தவர் நான்கு பிள்ளைகளுடைய குடும்பத்தில் இரண்டாம் பிள்ளையாவார். ஏறாவூர்ப் பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.


# கொவிட்டுக்கு மத்தியில் அபிவிருத்தி பணிகள்!





கொடிய கொரோனா தாக்கம் மற்றும் தடுப்பூசி வழங்கலுக்கு மத்தியில் மாத்தளை மாநகரசபை மேயர் சந்தனம் பிரகாஷ் நகரிலுள்ள பாதைகளை செப்பனிடும்பணியை நேரடியாகச்சென்று பார்வையிட்டு சீராக பாதயைமைக்க வழிசமைக்கும் அதேவேளை ,தொழினுட்பக்குழுவினருடன் கலந்துரையாடியும் வருகின்றார். படங்கள்;வி.ரி.சகாதேவராஜா

# மீன்கள் பதப்படுத்தப்பட்ட ஐஸ் கழிவுகள் குடியிருப்பு பகுதியில் கொட்டப்படுவதாக குற்றச்சாட்டு



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை பொது மீன் சந்தையில் மீன் பதப்படுத்தப்பட்ட ஐஸ் கழிவுகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் கொட்டப்படுவதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்

திருகோணமலை மட்க்கோ பிரதேசத்தில் மீன்களை பதப்படுத்தும் ஐஸ் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பிரதேசத்தில் சூழல் மாசடைந்து துர்நாற்றம் வீசுவதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.இவ்வாறு கொட்டப்படும் ஐஸ் கழிவுகள் திருகோணமலை மொத்த மீன் சந்தையில் வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்களை பதப்படுத்த பயன்படுத்தப்படும் ஐஸ் கழிவுகள் எனவும் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஐஸ் கழிவுகள் இவ்வாறு மக்கள் குடியிருக்கும் பங்குகளில் கொட்டப்படுவதால் அப்பிரதேசத்தில் ஒரு வகை துர்நாற்றம் வீச படுவதாகவும் வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கொட்டப்படும் ஐஸ் கழிவுகளினால் கொசுக்களின் பெருக்கம் அதிகரித்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கொட்டப்படும் ஐஸ் கழிவுகள் இரவு வேளைகளில் வாகனங்களில் கொண்டு வந்து கொட்டப்படுவதாகவும் சிறுவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் வயோதிபர்கள் என அனைவரும் பெரும் அசௌகரியங்களை முகம் கொடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக உரிய அதிகாரிகள் இவ்வாறு கொட்டப்படும் ஐஸ் கழிவுகளை இப்பிரதேசத்தில் கொட்டவிடாமல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

# தடுப்பூசி வழங்கலை சிறப்பாக முன்னெடுக்கும் அரசுக்கு நன்றி தெரிவிக்கும் மக்கள்

(வி.சுகிர்தகுமார்)





உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் இலவசமாக கொரோனா தடுப்பூசியை வழங்கிவரும் அரசாங்கத்திற்கு எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம் என அம்பாரை மாவட்ட தமிழ் மக்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்நடவடிக்கையினை தடையின்றி முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துவரும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியினையும் பாரட்டினையும் தெரிவிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

உலக நாடுகள் அனைத்தும் கொரோனா தொற்று காரணமாக பொருளாதார ரீதியில் வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் நமது நாடும் அதற்கு முகம் கொடுத்துள்ளது. இந்நிலையில் கொரோனா தொற்று நிலை காரணமாக இதுவரையில் 1600 பில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் அன்மையில் கூறியிருந்தார். ஆனாலும் அதனையும் தாண்டி அரசாங்கம் மக்கள் நலனில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து தடுப்பூசிகளை பெற்று மக்களுக்கு வழங்கி வருகின்றது.

பல நாடுகளில் தடுப்பூசியினை பணம் கொடுத்து பெறுவதற்கு மக்கள் ஆர்வம் காட்டிவரும் நிலையில் நமது நாட்டின் அரசாங்கம் முற்றும் முழுதாக இலவசமாக தடுப்பூசியினை வழங்கி வருவதை பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலும் வீடுகளில் முடங்கி கிடக்கின்ற முதியவர்களுக்கும் விசேட தேவையுடையவர்களுக்கும் சுகாதாரத்துறையினரும் இராணுவத்தினரும் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்போடு நடமாடும் சேவை மூலமும் தடுப்பூசியினை வழங்கி வருகின்றனர்.

இதனடிப்படையில் இங்கு வாழும் பெரும்பலான மக்கள் சினோபாம் இரண்டாவது தடுப்பூசியினையும் பெற்றுக்கொண்டுள்ளனர். இதனால் எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை. மாறாக நலமுடனேயே உள்ளோம்.

இதன் காரணமாக இன்று ஓரளவேனும் தொற்று கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் மக்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் கல்முனை பிராந்தியத்தை பொறுத்தமட்டிலும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை தடையின்றி முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு காரணமாக இருந்து செயற்பட்டுவரும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் உத்தியோகத்தர்கள் சுகாதாரத்துறை ஊழியர்கள் என பலருக்கும் மக்கள் நன்றி தெரிவித்தனர்.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் இலவசமாக கொரோனா தடுப்பூசியை வழங்கி வரும் அரசாங்கத்திற்கு எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம் என அம்பாரை மாவட்ட தமிழ் மக்கள்; கருத்து தெரிவித்தனர்.

இந்நடவடிக்கையினை தடையின்றி முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துவரும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியினையும் பாரட்டினையும் தெரிவிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

உலக நாடுகள் அனைத்தும் கொரோனா தொற்று காரணமாக பொருளாதார ரீதியில் வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் நமது நாடும் அதற்கு முகம் கொடுத்துள்ளது. இந்நிலையில் கொரோனா தொற்று நிலை காரணமாக இதுவரையில் 1600 பில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் அன்மையில் கூறியிருந்தார். ஆனாலும் அதனையும் தாண்டி அரசாங்கம் மக்கள் நலனில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து தடுப்பூசிகளை பெற்று மக்களுக்கு வழங்கி வருகின்றது.

பல நாடுகளில் தடுப்பூசியினை பணம் கொடுத்து பெறுவதற்கு மக்கள் ஆர்வம் காட்டிவரும் நிலையில் நமது நாட்டின் அரசாங்கம் முற்றும் முழுதாக இலவசமாக தடுப்பூசியினை வழங்கி வருவதை பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலும் வீடுகளில் முடங்கி கிடக்கின்ற முதியவர்களுக்கும் விசேட தேவையுடையவர்களுக்கும் சுகாதாரத்துறையினரும் இராணுவத்தினரும் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்போடு நடமாடும் சேவை மூலமும் தடுப்பூசியினை வழங்கி வருகின்றனர்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com



SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIAN FOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

சுபீட்சம்
supeedsam@gmail.com
supeedsam.com






கல்முனை ஸாகிறா தேசிய பாடசாலைக்கு கல்முனை டாக்டர் ஜெமில் ஞாபகார்த்த வைத்தியசாலையின் முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் றிஸான் ஜெமிலினால் பல இலட்சம் பெறுமதியான சி சி டிவி கமராக்கள் கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் எம் ஐ ஜாபிரிடம் வைத்தியசாலை நிர்வாகிகள் கமராக்களை கையளிப்பதை காணலாம். படம்:எம் எம். ஜெஸ்மின்

# போது வைத்திய சிகிச்சை நிபுணர் பி.கே. ரவீந்திரனை கௌரவிக்கும் நிகழ்வும் பிரியாவிடை வைபவமும்



(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஐந்து வருடங்கள் பொது சத்திர சிகிச்சை நிபுணராக சேவையாற்றி சிலாபம் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் சிறந்த மனிதாபிமானமுள்ள பொது வைத்திய சிகிச்சை நிபுணர் பி.கே. ரவீந்திரனை கௌரவிக்கும் நிகழ்வும் பிரியாவிடை வைபவமும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச்.எம்.அசாத் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் வைத்தியர்கள் உத்தியோகத்தர்கள் சுகாதாரத்துறை ஊழியர்கள் என சிலர் கலந்து கொண்டனர்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற நிகழ்வில் வைத்திய சிகிச்சை நிபுணர் பி.கே. ரவீந்திரன் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்க்கப்பட்டாடர். தொடர்ந்து இறைவணக்கத்துடனும் வரவேற்பு மற்றும் தலைமையுரையுடனும் இடம்பெற்ற நிகழ்வில் அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பொன்மனச் செம்மல் எனும் தலைப்பிலான வைத்தியரின் சேவை தொடர்பான காணொளியும் காண்பிக்கப்பட்டது.

இதன் பின்னராக பலரும் அவரது சேவை தொடர்பில் பாராட்டி பேசியதுடன் வாழ்த்துப்பா உள்ளிட்ட நினைவுப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

நிறைவாக வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எச்.எம்.அசாத் உரையாற்றியதுடன் தங்கப்பதக்கம் ஒன்றினையும் அணிவித்தார். இதன் பின்னராக வைத்திய சிகிச்சை நிபுணர் பி.கே. ரவீந்திரனால் ஏற்புரை இடம்பெற்றதுடன் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

# அமைச்சின் செயலாளரின் விஜயமும் மர நடுகையும்





(எம்.ஐ.எம்.றியாஸ்)

தேசிய அரச சார்பற்ற நிறுவன ஒன்றியங்களின் தவிசாளரும்,அக்கரைப்பற்று அஷ்ரப் லீடர் கனிஷ்ட கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளருமான எஸ்.எம்.லாபீரின் அழைப்புக்கமைவாக கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்க முதல் தடவையாக அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு அஷ்ரப் லீடர் கனிஷ்ட கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

இப்பாடசாலைக்கு விஜயம் செய்ததன் நினைவாக கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஞ்சித் திசாநாயக்க,வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண மேலதிக மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் எம்.பீ.அலியார்,தேசிய அரச சார்பற்ற நிறுவன ஒன்றியங்களின் தவிசாளர் எஸ்.எம்.லாபீர் ஆகியோர்களால் பலன் தரும் தென்ன மரக் கன்றுகள் பாடசாலை வளாகத்தில் நட்டி வைத்தனர்.

அக்கரைப்பற்று அஷ்ரப் லீடர் கனிஷ்ட கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளர் எஸ்.எம்.லாபீரின் கோரிக்கையின் நிமிர்த்தம் இப்பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பாடசாலையின் முன்னால் மற்றும் பின்னால் உள்ள வீதிகளை செப்பனிட்டு கொங்றீட் வீதிளாக அமைக்க இராஜாங்க அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அம்பாறை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் கே.எல்.எம். இஸ்மாயில்,அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் எம்.ஐ.ஏ. சஜீர் உட்பட இப்பாடசாலையின் சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கடந்த கால குறைகளைப் பற்றி விவாதிக்காமல் நிகழ்காலத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும்

## இத்தாலியின் போலோக்னா நகரில் நடைபெறும் ஜி20 சர்வமத மாநாட்டில் பிரதமர் மகிந்த

எல்லையை அடையலாம் என பிரதமர் மஹிந்த ராஜபக் தெரிவித்தார்.

இத்தாலியின் போலோக்னா நகரில் நடைபெறும் ஜி20 சர்வமத மாநாட்டின் ஆரம்ப தினமான நேற்று (12) முதலாவது அமர்வில் உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜி20 அரச தலைவர்களின் மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3031 ஆகிய இரு தினங்கள் இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெறவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு ஜி20 சர்வமத மாநாடு இடம்பெறுகிறது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜி20 சர்வமத மாநாட்டில் உரையாற்றினார்.

கலாசாரங்களுக்கிடையே சமாதானம், மதங்களிடையே புரிதல்ೀ எனும் தொனிப்பொருளில் வரலாற்று சிறப்பு மிக்க போலோக்னா நகரில் நடைபெறும் ஜி20 சர்வமத மாநாட்டில் உரையாற்ற கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மாநாட்டின் தொனிப்பொருள் குறிப்பாக எனது நாடான இலங்கைக்கும் தெற்காசியாவின் புவியியல் வலயத்திற்கும் பொருத்தமானதாக காணப்படுவதால் இச்சந்தர்ப்பத்தை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

இன, மத மற்றும் கலாசார பன்முகத்தன்மை என்பன எமது பிராந்தியத்தின் முக்கிய அம்சமாகும். எமது நாடுகளில் பல்வேறு இன, மத மற்றும் கலாசார பின்னணிகளை கொண்ட மக்கள் வசிக்கின்றனர்.எனினும், இவ்வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒன்றிணைந்து, பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்து, முதிர்நிலை தேசம் என்ற உணர்வை கட்டியெழுப்பும் சவாலுக்கு நாம் பதிலளித்துள்ளோம்.பொருளாதார, அரசியல் மற்றும் சமூக இலக்குகளை அடையும் போது பெரும்பாலும் எமது எதிர்காலம் ஒரு தேசம் என்ற ரீதியில் அதன் ஒற்றுமை மற்றும் சகவாழ்விலேயே தங்கியுள்ளது.

தீவிரவாத சித்தாந்தங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன்முறைகள் என்பன நமது யுகத்தின் மிக முக்கியமான சவால்களாகும்.சரியாக இருபது வருடங்களுக்கு முன்பு நடந்த 9/11 பயங்கரவாத தாக்குதல்களின் சோகமான சம்பவங்களை இங்கே நாம் நினைவுகூர வேண்டும். அதில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருடன் நாம் அத்துயரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.குற்றவாளிகள் மற்றும் அவர்களினால் கூறப்படும் நோக்கம் என்னவாக இருப்பினும் இச்சம்பவம் அனைத்து விதத்திலும் பயங்கரவாதத்தை எதிர்த்து போராட வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டுகிறது.

கொவிட் 19 நெருக்கடியானது பல்வேறு மதங்கள், இனங்கள் மற்றும் நாகரிகங்கள் என்ற வேறுபாடின்றி ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் மரண அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.தொற்றிலிருந்து தப்பித்து மீண்டும் நமது வாழ்வை ஆரம்பிக்க வேண்டுமாயின் சர்வதேச ஒத்துழைப்பை பலப்படுத்த வேண்டும்.நவீன மருத்துவத்தின் மூலம் கிடைக்கும் தடுப்பூசி மற்றும் பிற பாதுகாப்புகள் உலகம் முழுவதும் காணப்பட வேண்டியதுடன், சர்வதேச அமைப்பு மற்றும் வலுவான பொருளாதாரத்தை கொண்ட நாடுகளிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு பொருளாதார ரீதியில் வலுவற்ற நாடுகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இது சிலர் மாத்திரமன்றி அனைவரும் வெற்றி பெறுவதற்கான போராட்டமாகும்.

தொற்று காரணமாக நாடுகள் தமது எல்லையை தற்காலிகமாக மூடுவது உகந்தது என்ற போதிலும், தனிமைப்படுத்தல் என்பது அதற்கு தீர்வல்ல.நாம் வாழும் உலகில் ஒரு யதார்த்தம் என்னவெனில், நாடுகளின் எல்லை ஊடாக பொருட்கள், சேவைகள் மற்றும் மக்களின் சுதந்திரம் இயக்கப்படுகிறது.சிறந்த வாழ்க்கையை எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் இடம்பெயர்விற்கு தற்போதைய நிலைமை சவாலாக விளங்குகின்ற போதிலும், சாதாரணமானதொரு கட்டமைப்பின் கீழ் வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் சுதந்திரமாக காணப்பட வேண்டும் என தெரிவித்தார்.

ஐரோப்பாவின் பழமையான கற்றல் மையமான போலோக்னாவில் நடைபெறும் இந்த உற்சாகமூட்டும் மாநாடு அதற்கு மதிப்புமிக்க பங்களிப்பை அளிக்கிறது. ஏழு ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஜி20 சர்வமத மாநாடு, கலாசாரம் தொடர்பான கலந்துரையாடலுக்கான ஒரு அரிய வாய்ப்பாகும்.

இந்த மதிப்புமிக்க மாநாட்டின் ஆரம்ப அமர்வில் உரையாற்றுவதற்கு அழைப்பு விடுத்து நீங்கள் எனக்கு அளித்த கௌரவத்தை நான் நன்றியுடன் நினைவுகூருகின்றேன் என அவர் தெரிவித்தார்.

# இலங்கை தமிழர்களுக்கு உரிமைகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை

## திருச்சியில் இராதாகிருஷ்ணன் எம்.பி பேட்டி

இந்தியா தமிழகத்தில் திருச்சிக்கு சென்றுள்ளார்.

அங்கு செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர்மொகிதீன் கலந்து கொண்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது,

தமிழகத்தில் அகதிகள் முகாமில் வாழும் இலங்கை மலையக தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கி இந்திய வம்சாவளி மக்களாக ஏற்றுக் கொள்ள மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் கொரோனா காரணமாக உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது: இலங்கையில் புதிய அரசு தேர்வு செய்யப்பட்டு ஒராண்டு காலமான நிலையில் பல புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டு உள் மக்கள் பாதுகாப்புக்கு எந்த இடையூறும் இல்லை.

அதேநேரம் மக்கள் எதிர்பார்த்த விருப்பங்கள் நிறைவேறவில்லை. தமிழக மக்கள் வசிக்கும் பகுதியில் மக்களின் உரிமைகள், விருப்பங்கள் மற்றும் தாமாக சுதந்திரமாக நடமாடும் உரிமைகள் நிறைவேறவில்லை.

புதிதாக வந்துள்ள தமிழக முதல்வர் இலங்கை மறுவாழ்வு இல்லம் என்று, இலங்கை அகதிகள் முகாமை பெயர் மாற்றம் செய்து அடிப்படை வசதிகள் செய்துள்ளது வரவேற்கத்தக்கது.

புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்கள் மீண்டும் இலங்கையில் குடியேற நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தமிழக முதல்வரின் அறிவிப்புக்கு நன்றி.

இலங்கை அகதிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பது பாராட்டுக்குரிய விஷயம்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் மற்றும் இலங்கையில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட மலையக தமிழர்கள் அகதிகள் முகாமில் உள்ளனர்.

இலங்கையில் 10வருடமாக போர் பிரச்சனைகள் இல்லை, மறுவாழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரும்பிய வடகிழக்கு தமிழர்கள் இலங்கையில் மீண்டும் குடியேறுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கைகள் ஏற்படுத்தி வருகிறது.

30-வருடங்களாக தமிழகத்தில் வந்து தங்கியுள்ள மலையக தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு வருவதில் எந்த பிரயோஜனமும் இல்லை. மலையக பகுதிக்கு மீண்டும் வேலை செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை, தோட்டத்தில் மட்டுமே அவர்கள் வேலை செய்ய முடியும், சொந்த காணி கிடையாது.

எனவே தமிழக முதல்வர் அவர்கள் இதனை கருத்தில் கொண்டு மலையக தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கி இந்திய வம்சாவளி மக்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழக அரசும் இந்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகம் முழுவதும் பொருளாதார தட்டுப்பாடு நிலவும் சூழலில் கொரோனா காரணமாக உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, தமிழ் மற்றும் இலங்கை மக்களுக்கு விரக்தியான அரசாக தற்போது புதிய அரசு உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு கழித்தே விரக்தி ஏற்படும் நிலையில் புதிய அரசு மீது புத்த மக்கள், மத குருமார்கள் என அனைவரும் விரக்த்தியில் இருப்பதை காணமுடிகிறது.

இலங்கையில் சீனா தங்களது பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிக முதலீடு செய்து இருப்பதன் மூலம் காண முடிகிறது. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளின் இரட்டை குடியுரிமை வழங்கும் பட்சத்தில் பாதுகாப்பு கருதி இதுவரையும் வழங்கப்படாத இரட்டை குடியுரிமையை இந்திய அரசும் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதைய பாஜக அரசு இலங்கை நட்புறவை அதிகம் பேணுகிறது, கடந்த காலங்களில் இந்த நட்புறவு அதிகமாக இருந்தாலும் சில நடவடிக்கைகள் பிரச்சினையாக இருந்தது.

ராஜீவ்காந்தி கொலை செய்ததாகவும் இருந்ததால் அதன் அடிப்படையில் போராளிகள் இயக்கம் முற்றிலும் ஒழிக்கப்பட்டதற்கு அதுவும் ஒரு காரணம். இலங்கையில் மீண்டும் விடுதலைப்புலிகள் வருவதற்கு மிக மிக வாய்ப்பு குறைவு அதற்கான சட்ட திட்டங்கள் அதிகம் ஏற்படுத்தியுள்ளனர்.

புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. உலகம் அங்கீகரிக்கப்படாத எந்த ஒரு போராளி குழுவும் ஒரு நாட்டில் தலை எடுப்பது கஷ்டம் என்றார். தமிழகத்தின் ஆட்சி மாற்றம் இலங்கை தமிழர்களுக்கு சாதகமாக இருப்பதை காண முடிகிறது, சுற்றுலாவை நம்பியுள்ள இலங்கையில் படுமோசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால்தான் பொருளாதார வீழ்ச்சி காணப்படுகிறது.

அதனால்தான் பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது 6மாத காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சி பெறும். கொரோனா முடிவுக்கு வந்த பின்னர் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் என்ற நம்பிக்கை உள்ளதாக தெரிவித்தார். அதிமுக ஆட்சியில் கூட பல்வேறு திட்டங்கள் இலங்கைக்கு செய்யப்பட்டுள்ளது அமைச்சராக செங்கோட்டையன் இருந்த காலகட்டத்தில், தற்போது மீண்டும் திமுக ஆட்சியின் ஊடாக அந்த நிலை தொடர வேண்டும் என எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.






# பாடசாலைகளை திறப்பதற்கான எவ்வித திட்டங்களும் இந்த அரசாங்கத்திடம் இல்லை

## திருகோணமலை மாவட்ட பெற்றோர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)



நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் - 19 கொரோனா சூழ்நிலை காரணமாக ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பாடசாலைகள் மூடப்பட்டு அதனை மீள திறப்பதற்கான எவ்வித திட்டமும் இந்த அரசாங்கத்திடம் இல்லை என திருகோணமலை மாவட்ட பெற்றோர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

திருகோணமலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

நாட்டை பொறுத்தவரை சிந்தித்து செயற்பட வேண்டிய சூழ்நிலையில் தற்போது பெற்றோர்கள் இருப்பதாகவும் நாட்டின் முக்கிய அத்தியாவசிய சேவைகளான கல்வி,அபிவிருத்தி மற்றும் சுகாதாரம் என்பன அடிமட்டத்தை அடைந்திருப்பதாகவும் திருகோணமலை பெற்றோர் ஒன்றியத்தின் உறுப்பினர் என்.விதானகே லோகு களபதி தெரிவித்தார்.

மேலும் நாடு கல்வி,அபிவிருத்தி மற்றும் சுகாதாரம் என்ற மூன்றில் முன்னோக்கி செல்லபடுமா அல்லது வேறொரு நாட்டுக்கு தாரைவார்க்கபடுமோ என்ற ஐயம் எழுந்துள்ளதாகவும் சுகாதாரம் அபிவிருத்தி என்பன எம்மால் பேச முடியாத விடயம் என்றாலும் கல்வி விடயத்தைப் பொறுத்தவரையில் எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு கண்டிப்பாக பேச வேண்டிய சூழ்நிலையில் இருப்பதாகவும் இன்றைய தினம் இவ்வாறு ஒன்று சேர்ந்திருப்பதாக தெரிவித்தன.

பாடசாலைகள் மூடப்பட்ட காலம்முதல் ஆசிரியர்,மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகளோ அல்லது பாடசாலைகளை தொற்று நீக்கும் செயற்றப்பாடுகளை கூட இதுவரை முன்னெடுத்து செல்ல முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் பாடசாலை ஆரம்பிக்கப்படாத பட்சத்திலும் ஆசிரியர்கள் இணையவழி மூலம் கற்பித்தலை தொடர்ச்சியாக வழங்கிய வண்ணம் இருந்தார்கள் அவ்வாறான செயல்பாடுகளில் முழுமையாக அர்ப்பணித்து செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு தாங்கள் தலைவணங்குவதாக தெரிவித்த திருகோணமலை பெற்றோர் ஒன்றியம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் காரணமாக அவ்வாறு இடம்பெற்ற இணைய வழிக் கற்பித்தலை கூட முன்னெடுத்து செல்ல முடியாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு இணையவழி கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு சரியான கொடுப்பனவுகள் கொடுக்கப்படாமையினால் இணைய வழி கற்பித்தலை கூட இடைநிறுத்திஉள்ளதகவும் தெரிவித்தனர்.

இவ்வாறு காலம் கடந்து சென்று கொண்டிருக்கும்போது அரசியல்வாதிகளுக்கு இதுபற்றி சிறிதளவேனும் சிந்தனை இல்லாத போதிலும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு குறைந்தபட்சம் இணைய வழி கற்பித்தலையாவது தொடர்வதற்கு ஆசிரியர்களுக்கான சம்பளப் பிரச்சினையை தீர்த்து வைத்தது எமது பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதி செய்து தருமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக திருகோணமலை மாவட்ட பெற்றோர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர் .

மேலும் எமது பிள்ளைகளுக்கான உடை,உணவு,தங்குமிட வசதி ஏனைய தேவைகளை பெற்றோராகிய தங்களால் பூர்த்தி செய்ய முடியும் என்றாலும் கற்றல் மற்றும் கற்பித்தல் விடயத்தில் ஒரு ஆசிரியரால் மாத்திரமே முறையாக முன்னெடுத்து செல்ல முடியும் என்பதுடன் எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு ஆசிரியரின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கொடுத்து பாடசாலைகளை மீள திறப்பதற்கு பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்து நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துடன் இவ் ஊடக சந்திப்பில் அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்துவை மற்றும் மாணவர்களின் கல்வி உரிமையை உறுதி செய் என்ற பதாதைகளை ஏந்திய வண்ணம் திருகோணமலை பெற்றோர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தாய்க்கும், எட்டு நாள் குழந்தைக்கும் கொரோனா தொற்று உறுதி

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

காய்ச்சல் காரணமாக திருகோணமலை- மஹதிவுல்வெவ பிரதேசவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எட்டு நாள் குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

மஹதிவுல்வெவ-தெவனிபியவர பகுதியில் வசித்து வரும் 23 வயதுடைய தாயாரின் குழந்தைக்கு காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அங்கு பெறப்பட்ட அன்டிஜன் பரிசோதனை மூலம் எட்டு நாள் பிறந்த குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் இதனையடுத்து தாய்க்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் விடயத்துக்கு பொறுப்பான வைத்தியதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை குறித்த தாயார் வசித்து வந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்களைதனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தொடர்ந்தும் அவரது குடும்பத்தினருக்கு பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

# கிராம மக்களின் வாழ்வாதாரத்துக்காக பெரியமடு குளத்தில் 4 இலட்சம் இறால் குஞ்சுகள்



(வாஸ் கூஞ்ஞ)

கொரோனா தொற்று காலத்தில் கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட குளங்களுகளில் 300,000.00 இறால் குஞ்சுகள் விடுவதற்கான ஏற்பாடுகள் மெசிடோ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இதேவேளையில் மன்னார் பெரியமடு குளத்தில் 4 இலட்சம் இறால் குஞ்சுகள் விடப்பட்டுள்ளது

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மற்றும் வடக்கு மாகாண சபையும் இணைந்து மன்னார் பெரியமடு குளத்தில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு என 4 லட்சம் இறால் குஞ்சுகள் விடும் நிகழ்வு வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்றது.

கொரோனா தொற்று காலத்தில் கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அதேவேளை நன்னீர் மீன்பிடி தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் மேற்படி செயற்திட்டன் மெசிடோ நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

இவற்றிற்கான இறால் குஞ்சுகளை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்தது கொள்வனவு செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் டமன்னார் அனர்த்த முகாமைத்துவ உதவி ஆணையாளர் கனகரத்தினம் திலீபன், வடக்கு மாகாண சபை உத்தியோகத்தர்கள், தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் மன்னர் மெசிடோ நிறுவன ஊழியர்கள் மற்றும் பெரியமடு நன்னீர் மீன்பிடி சங்கத்தின் அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.

அதே நேரம் இம்மாத பகுதியில் கிளிநொச்சி மன்னார் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட குளங்களுகளிலும் 300,000.00 இறால் குஞ்சுகள் விடுவதற்கான ஏற்பாடுகள் மெசிடோ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட இருப்பதாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ இவ்வாறு தெரிவித்தார்.

# காதி நீதிமன்றங்களை ஒழிக்க முனைவது இந்த அரசு செய்யும் வரலாற்றுத் தவறாகும்

## இம்ரான் எம்.பி



(பைஷல் இஸ்மாயில்)

தற்போது நடைமுறையிலுள்ள காதி நீதிமன்றங்களை ஒழிக்க முனைவது இந்த அரசு செய்யும் வரலாற்றுத் தவறாகும். இந்தத் தவறை செய்ய வேண்டாம் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் விவாக, விகாரத்துச் சட்டம் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இந்த நாட்டில் அமுலில் உள்ளது. இதனை அடிப்படையாக வைத்தே காதி நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த ஒல்லாந்தரோ ஆங்கிலேயரோ கூட இந்த விடயத்தில் கை வைக்கவில்லை. எனினும், இந்த அரசு காதி நீதிமன்றங்களை ஒழிக்கும் பாரிய வரலாற்றுத் தவறைச் செய்ய முனைகின்றது. இது குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன். காதி நீதிமன்ற அமைப்புகளில் குறைபாடுகள் இருப்பின் அதனை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர முற்றாக ஒழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது.

காலுக்கு வாங்கிய செருப்பு சிறியது என்பதற்காக, செருப்பை மாற்றாமல் செருப்புக்கேற்ப காலை வெட்டுவது போன்ற செயலாகவே இது அமைந்துள்ளது. இந்த செயற்பாடு ஒரு ஆரோக்கியமானதல்ல. ஆண்டாண்டு காலமாக அமுலில் இருந்து வரும் இந்த காதி நீதிமன்ற முறையை ஒழிக்கப் போவதாக அரசு பகிரங்கமாக அறிவித்திருந்தும் முஸ்லிம் கட்சிகள் எவையும் இது குறித்து இதுவரை வாய் திறக்கவில்லை.

முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்க முஸ்லிம் கட்சிகளை உருவாக்கியதாகக் கூறுகின்றார்கள். முஸ்லிம்களின் வாக்குகளினாலேயே பாராளுமன்றத்திற்கும் வந்தார்கள். தேர்தல் காலங்களில் இந்த அரசுக்கு எதிராக மோசமான பிரச்சாரங்களை முன்வைத்த இவர்கள் இப்போது இந்த அரசாங்கத்தோடு ஒட்டியிருக்கின்றார்கள். காதிநீதிமன்றத்தை ஒழிக்கப் போவதாக அரசு தற்போது பகிரங்கமாக அறிவித்துள்ளது. இது முஸ்லிம்களது உரிமை இல்லையா? ஏன் இன்னும் மௌனமாக இருக்கின்றீர்கள் என்று நான் முஸ்லிம் கட்சிக்காரர்களைக் கேட்க விரும்புகின்றேன்.

முஸ்லிம் கட்சிகளின் மௌனத்தை பார்க்கும் போது, இது அவர்களின் சம்மதத்தோடு தான் இந்த விடயம் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே அரசின் இந்த வரலாற்றுத் தவறுக்கு துணைபோகும் செயற்பாட்டிலிருந்து முஸ்லிம் கட்சிகள் விடுபட வேண்டும். அதனைப் பகிரங்கமாக மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.



# மட்டக்களப்பின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கும் சதோச விற்பனை நிலையம்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சதோச விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் முன்மொழிவுகளை அமைச்சர் பந்துல குணவர்தன அவர்களிடம் முன் வைத்துள்ளேன் என இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சதோச விற்பனை நிலையங்களின் ஊடாக மக்களுக்கு தேவையான பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கான நடைமுறைகள் தொடர்பில் கண்டறிவதற்கான களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் இங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நாட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு கொரோனா தாக்கத்திற்கு மத்தியில் இக்கட்டான சூழ்நிலையிலும் அரசாங்கத்தின் தலையீட்டினால் அனைத்து சதோச விற்பனை நிலையங்களும் திறக்கப்பட்டு அத்தியாவசிய பொருற்களை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைத்திருப்போர் தொடர்பில் சட்டநடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் பதுக்கி வைத்திருக்கும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அவற்றை மக்களுக்கு நியாயமான விலையில் அனைவருக்கும் பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை சதோச விற்பனை நிலையங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருக்கின்றது.

தற்போது அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பை தடுப்பதற்காகவே சில வியாபாரிகள் அத்தியாவசிய பொருற்களை பதுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்தகால அரசாங்கம் இருந்த சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் நலனுக்காக அமைக்கப்பட்ட இரண்டுக்கும் மேற்பட்ட சதோச விற்பனை நிலையங்கள் மூடப்பட்டன. அவை இன்றும் திறந்த நிலையில் இருந்திருந்தால் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு மிக இலகுவாக இருந்திருக்கும். எனினும் தற்போது எனது வேண்டுகோளின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சதோச விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் உற்பத்தியாளர்களின் பொருட்களை சதோச விற்பனை நிலையங்களுக்கு பெற்றுக்கொள்வது தொடர்பிலும் பல முன்மொழிவுகளை அமைச்சர் பந்துல குணவர்தன அவர்களிடம் நான் முன்வைத்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.

# மகாகவி பாரதியாரின் 100 வது நினைவு தினம் யாழில்

(வாஸ் கூஞ்ஞ)





மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 100 வது நினவு தினம் யாழ் இந்தியத்துணைத் தூதரகத்தில் சனிக்கிழமைநினைவு கூறப்பட்டது

யாழ் பகுதியில் உள்ள பாரதியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதற்கு யாழ் இந்திய தூதரகம் முயற்சிகள் மேற்கொண்டபோதும் கொவிட் 19 தாக்கம் நாட்டில் இடம்பெற்று வருவதால் இதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லையென யாழ் இந்திய தூதரகம் வட்டாரம் தெரிவித்தது.

இருந்தபோதிலும் இந்திய யாழ் தூதரகத்தில் பாரதியாரின் திருவுருவ படத்தை ஸ்தாபித்து யாழ்ப்பானத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராதகஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மகாகவி பாரதியாரின் படத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யும் நிகழ்வை மேற்கொண்டார்.

இந்த நிகழ்வின்போது மாண்புமிகு, மீன் வளத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பிரைகள் அங்கஜன் இராமநாதன், சுரேன் ராகவன், எம்.எ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறீதரன், சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.சிவஞானம் , யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் உட்பட முன்னாள் பாராளுமன்ற உறுப்பிரை'கள், சுரேஷ் பிரேமசந்திரன், மற்றும் சிவாஜிலிங்கம் ,யாழ்பல்கலைக் கழகத்தின் ஓய்வுபெற்ற தமிழ் விரிவுரையாளர்கள் என பலர் இணைய தளத்தின் ஊடாக இவ் நிகழ்வில் கலந்து கொண்டு மகாகவி பாரதியாருக்கு மரியாதை செலுத்தியதாக யாழ் இந்திய தூதரகம் தெரிவித்தது .

# செட்டியூர் சிந்தனைச்செல்வனின் இளமைக்கால மறைவு

## செட்டிபாளையம் கிராமத்தின் கலைத்துவதற்கு மட்டுமன்றி நவீன கலையுலகிற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்

(83ஆவது ஜனன தின விசேட பதிவு)



செட்டியூர் சிந்தனை செல்வன்.க.மயில் வாகனம் ஆசிரியர் அவர்கள் சிறந்த கவிஞர், நல்ல நடிகர், தலை சிறந்த நாடகாசிரியர், பொறுப்புணர்ந்து செயற்பட்ட பாடசாலை ஆசிரியர் ஈழநாட்டின் இரட்டைப்புலவர் களான கணபதிப்பிள்ளை புலவர், சின்னவப் புலவரின் கலைப்பட்டறையில் வளர்ந்தவர். செட்டிபாளையம் ஈன்றெடுத்த ஈழத்துப்பூரா டனாரோடு மிகநெருங்கி பழகிய கலைஞர். செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் குழாத்தோடும், மாணவர்களோடும், உள்ளூர்கலைஞர்களோடும் இறுக்கமான கலைப்பிணைப்பைக் கொண்ட பாரம்பரிய கலைத்துவத்தைக்கற்று நவீனகலைத்துவ உருவாக்கத்திற்கு ஓர் உதாரண புருஷராக செயற்பட்டவர்.

இலங்கையின் வரலாற்றில் நாட்டுக்கூத்து காலநீட்டத்தாலும், தாள ஆட்டத்தாலும் வலு விழந்து செல்கின்ற வேளையில் நவீனநாட்டுக் கூத்தின் பால் களரிக்கூத்தை திசைதிருப்பிய வர். குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் கால் ஆண்டிற்கு முன்னராக களரிக்கூத்துக்கள் பல மணித்தியாலங்கள் ஆடப்படும். மக்கள் தமது காலத்தை சுருக்க முற்பட்ட காலமும் இதுவாகும். காலத்தின் தேவையுணர்ந்துமர புவழி நாட்டுக் கூத்தினை நவீன நாட்டுக் கூத் திற்கு நிலை பிரித்து வெற்றி கண்டவர்தான் செட்டியூர் சிந்தனைச்செல்வன் மயில்வாகனம் ஆசிரியர் அவர்கள்.

ஒரு காலத்தில் இவரால் இயற்றப்பட்ட பொன்னம்பல போடியார் நவீன நாட்டுக்கூத்து மரபிழந்த பாரம்பரிய கூத்து கலையை மக்கள் மீண்டும் ஆர்வத்தோடு ரசிக்கும் நவீன கூத்துக் கலையாக மாற்றியவர். பாரம்பரிய கதைகளை கூறும் களரி ஆட்டம் சமூக சீர்திருத்தத்தை கூறும் கதைகளாகவும், நகைச்சுவைகளை கூறும் கதைகளை கூறுவதாகவும் இவரது படைப்புகள் அமைந்திருந்ததோடு பண்டைய புராண, இதிகாச கதை கூறும் மரபிலிருந்து சமகால சமூக சீர்திருத்தத்தை எடுத்துக்கூறும் கதைகளாக இவரது ஆக்கங்கள் மாறின.

இரட்டைப்புலவர்களுக்கு அடுத்துவந்த கவி ஞராக செட்டியூர் சிந்தனைச் செல்வனைக் குறிப்பிடலாம். மரபுக் கவிதையிலிருந்து மாற்று சிந்தனையுடையதும் சாதாரண மக்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய நவீனத்துடன் ஆக் கங்களை இவர் உருவாக்கியிருந்தார். இலகு தமிழும் இலகுவில் விளங்கக்கூடிய சந்தமும் அக்கால மக்களின் தேவை மரபும் மக்கள் இவ ரது கவிதை மீதும் நவீன கூத்தின் மீதும் ஈர்க்கப் பட்டமைக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

இளங்கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்பதில் செட்டியூர் சிந்தனைச்செல்வன் அவர்கள் அக்கறையோடு செயற்பட்டவர். பாடசாலை மட்டத்தில் சிறந்த கலைஞர்க ளைப் பயிற்றுவித்து பல பரிசுகளை வென்ற வர் சரஸ்வதி பூசை என்றால் கலை நிகழ்ச்சி க்கு தட்டுப்பாடு கிடையாது மூத்த நிருவாக சே வை அதிகாரி மூ.கோபாலரத்தினம், முன்னாள் உதவிக்கல்வி பணிப்பாளர் புவனசுந்தரம், முன் னாள் மக்கள் வங்கி முகாமையாளர் மூ.கனக ரெத்தினம், இளைஞர் சேவை அதிகாரி வெ. தர்மரத்தினம், கிராமியக்கலை ஜோதி பரசுரா மன், கலைஞர். கோபாலபிள்ளை முதலான வர்கள் சிந்தனைச் செல்வனின் கலைப்பட்ட றையில் இரண்டறக் கலந்து வளர்ந்தவர்கள்.

செட்டிபாளையம் மகா வித்தியாலயத் தில் க.செந்தில்நாதன், பெ.ஆறுமுகம், சி. சபாரெத்தினம், திருமதி.அ.அருளானந்தம், திருமதி ச. பவளம் போன்ற கலைத்துவம் மிக்க ஆசிரியர்களோடு இணைந்து அவர்களது இயலளவையும் ஒருங்கிணைத்து நவீன கலை மரபை வளர்த்தவர் அக்காலத்தில் செட்டிபா ளையம் மகா வித்தியாலயம் ஒரு கலைக் கூட மாக திகழ்வதற்கு இவரும் ஒரு காரணகர்த்தா பாடசாலைக்கு அப்பால் தமிழ் சுடர் நவீன கலா மன்றத்தை உருவாக்கி அதனூடாக கலையை வளர்த்து பட்டி தொட்டி எங்கும் கலைமணம் பரப்பி விடுபட்ட கிராமத்தின் கலைமுகவரிக்கு கால்கோள் இட்டவர்.

ஈழத்து இரட்டைப்புலவர்களது வீடு எவ் வாறு திண்ணைப் பள்ளிக் கூடமாகவும், கலைக்கூடமாகவும் செயற்பட்டதோ அதே போன்றுதான் செட்டியூர் சிந்தனைச் செல்வ னின் வீடும் பாடசாலை நேர முடிவுற்றதும் மத் தளம், சல்லாரி என்பதை இனிய ஓசை நயத்து டன் தொடர்ச்சியாக ஒலி யெழுப்பும் மறுபுறம் இனிய நவீன பாடல்கள் ஓசை ஒலிக்கும். பாடல்களோடு ஆடல்களும் தொடர்ச்சியாக நடைபெறும் கிராமத்தின் படித்த கலைஞர் களான கணபதிப்பிள்ளை கிளாக்கர், கோபால பிள்ளை முதலானவர்கள் மத்தளம் வாசிப் போர் அக்காலத்தில் கிராமத்திற்குள் மாண வர்கள், உள்ளூர் கலைஞர்களுக்கிடையேயும் நல்லுறவும், புரிந்துணர்வும் காணப்பட்டது.

அதற்கு செட்டியூர் சிந்தனை செல்வனின் கூட்டுறவு அடிப்படையாக அமைந்திருந்தது.

சமூக சீர்திருத்தத்தை பிரதிபலிக்கும் கண் ணாடியாக செட்டியூர் சிந்தனை செல்வனின் படைப்புகள் காணப்பட்டன சமூக ஒழுக் கமும், கட்டுப்பாடும் மீறப்பட்டால் மறைமு கமாக சுட்டிக்காட்டி சீர்திருத்தம் பண்புடைய படைப்புகளாக இவரது உருவாக்கங்கள் காணப்பட்டன. அதற்கு அவரது மிக எழிய தமிழ் நடையில் அமைந்த பின்வரும் ஆக்கம் நல்லதோர் உதாரணமாகும்.

''மணமாக மங்கையர் மலிந்தாராம்
காரணம் மாப்பிள்ளை தட்டுப்பாடோ
தினம் எங்கள் சிந்தையை திணற
அடித்திடும் சீதண முட்டு பாடோ
மணம் என்றால் கைப்பணம்
வாங்கிடும் பழக்கத்தை மறுசீரமைப்பு
செய்தால் பணம் இல்லா ஏழைகள்
பதிதோர் ஒளி காண்பார்
பாதி உடைகள் போடா''

செட்டியூர் சிந்தனைச்செல்வனின் இளமைக்கால மறைவு செட்டிபாளையம் கிராமத்தின் கலைத்துவதற்கு மட்டுமன்றி நவீன கலையுலகிற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இருப்பினும் இவரது முயற்சியின் உருவாக்கங்கள் சூறாவளி, யுத்தம் போன்ற அனர்த்தங்களாலும், பரா மரிப்பின்மையாலும் பிற்கால சந்ததிக்கு பயன்படும் வகையில் ஆவணப்படுத்தப்ப டாமை நம்மூர் இரட்டைப்புலவர்களுக்கு விட்ட தவறை போன்றே தோன்றுகின்றது.

எனவே செட்டியூர் சிந்தனைச்செல்வ னின் கிடைக்கப்பெறும் ஆக்கங்களை யேனும் சேகரித்து ஆவணப்படுத்தப்படல் யாவருக்கும் பயனுடையதாகும்.



கலாநிதி. எஸ். அமலநாதன்
செட்டிபாளையம்

